දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
DEPARTMENT OF INLAND REVENUE

ලේකම් අංශය
14 වන මහල
දේශීය ආදායම් ගොඩනැගිල්ල
ශ්‍රීමත් චිත්තම්පලම් ඒ ගාඩිනර් මාවත
තැ.පෙ. 515, කොළඹ 2- ශ්‍රී ලංකාව

செயலகம்
14 வது மாடி
உள்நாட்டு இறைவரிக் கட்டிடம்
சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை
த.பெ.இல. 515, கொழும்பு - 2, இலங்கை

Secretariat
14th Floor
Inland Revenue Building
Sir Chittampalam A Gardiner Mawatha
P.O. 515, Colombo 2 - Sri Lanka

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 011 - 2338574/ 2338659/ 2338635/ 2338570/ 2338543
දුරකථන / தொலைபேசி / Telephone: 011- 2135402/ 2135410/ 2135412 / 2135413/ 20135411
E-Mail – secretariat@ird.gov.lk
Web: www.ird.gov.lk

சுற்றறிக்கை இல : SEC / Stamp Duty / 2015 / 03 2015 ஏப்ரல் மாதம் 21 ஆந் திகதி.

சனாதிபதியின் செயலாளர், பிரதம மந்திரியின் செயலாளர், அமைச்சரவையின் செயலாளர், பாராளுமன்ற செயலாளர் நாயகம்,
நிரல் அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள்,
அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் பாதுகாப்புப் படைகளின் தலைவர்கள்,
மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள்,
உள்ளூராட்சி மன்றங்களின் (மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின்) பிரதம நிறைவேற்று அதிகாரிகள்,
நியதிச் சட்ட நிறுவனங்களின் ( அதிகாரசபைகள், ஆணைக்குழுக்கள், கூட்டுத்தாபனங்கள், அரசாங்க வங்கிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின்) பிரதம நிறைவேற்று அதிகாரிகள்.

**முத்திரைத் தீர்வையினை அறிவீடு செய்தல், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் அனுப்புதல் தொடர்பான அறிவுறுத்தலும் வழிகாட்டல்களும்.**

2008 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க முத்திரைத் தீர்வைகள் (விசேட ஏற்பாட்டு) (திருத்தச்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான, 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வைகள் (விசேட ஏற்பாட்டுச்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இச்சுற்றறிக்கையினை வெளியிடுகின்றேன்.

02. அந்த முத்திரை தீர்வை (விசேட ஏற்பாட்டுச்) சட்டத்தின் 1 ஆம் பிரிவின் 1 ஆம் பகுதியில் முத்திரைத் தீர்வை விதித்தல், விடுவித்தல் மற்றும் அதற்கு ஏற்புடையதாகும் நடைமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த 1 ஆம் பகுதியில் 3 முதல் 9 வரையான பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள் ஏற்பாடுகள் மற்றும் அச்சட்டத்தின் 03 பிரிவின் கீழ் ஆக்கப்பபட்டு பின்வரும் அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைகள் தொடர்பில் உன்னிப்பாகக் கவனம் செலுத்தி, உரிய முத்திரைத் தீர்வைகளை அறவீடு செய்து, உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு உரியவாறு அனுப்பி வைக்குமாறு இத்தால் அறியத் தருகின்றேன்.

(I) 2006.10.05 ஆந் திகதிய 1465 / 19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி (வீதங்கள்)
(II) 2006.10.05 ஆந் திகதிய 1465 / 20 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி (விடுவிப்புக்கள்)
(III) 2008.01.01 ஆந் திகதிய 1530 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி (வீதங்களுக்கான திருத்தங்கள்)
(IV) 2012.12.17 ஆந் திகதிய 1789 / 09 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி (வீதங்களுக்கான திருத்தங்கள்)
(V) 2013.05.10 ஆந் திகதிய 1809 / 19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி (வீதங்களுக்கான திருத்தங்கள்)

03. முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாட்டுச்) சட்டத்தின் 7 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் முத்திரைத் தீர்வையினை தீர்க்கும் பொறுப்பினைக் கொண்டுள்ள அனைத்து நிறுவனங்களும் இத்திணைக்களத்தின் முத்திரைத் தீர்வைப் பிரிவில் பதிவு செய்து, பிணையில் சேருவது அவசியமாகும். இதுவரையில் அவ்வாறு பதிவுசெய்திராதவிடத்து, அனைத்து நிறுவனங்களும் அவ்வாறு பதிவுசெய்வதற்கான படிவங்களைப் பெற்று உடனடியாக விண்ணப்பிப்பது அவசியமாகும்.

04. முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாட்டுச்) சட்டத்தின் 7 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள முத்திரைத் தீர்வையை தீர்ப்பது தொடர்பான ஏற்பாடுகளுக்கு இணங்க, முத்திரைத் தீர்வைகளைத் தீர்ப்பதற்காக ஏற்கனவே உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவுசெய்துள்ள நிறுவனத் தலைவர்கள் ஒவ்வொரு வருடமும் மார்ச் 31, ஜூன் 30, செப்டம்பர் 31, டிசம்பர் 31 ஆந் திகதிகளில் முடிவடையும் காலாண்டுகளுக்கான தீர்க்கப்பட்ட முத்திரைத் தீர்வை தொடர்பான கூற்றுக்கள் மற்றும் வைப்புப் படிவங்கள் உள்ளிட்ட உரிய ஆவணங்களை அனுப்புதல் வேண்டும்.

05. குறித்த சட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்கு இணங்க ஒவ்வொரு காலாண்டிலும் குறிப்பாக அனுமதிப் பத்திரங்கள், சம்பளப் பற்றுச்சீட்டுக்கள் மற்றும் ஏனைய பற்றுச் சீட்டுக்கள் தொடர்பில் அறவிடப்பட்ட முத்திரைத் தீர்வையினை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புகின்ற போது மாதாந்தம், உங்கள் நிறுவனத்தின் பல்வேறு பிரிவிகளிலிருந்து தனித்தனியான காசோலையினை/ காசோலைகளை அனுப்புவதனால் பல்வேறு சிக்கல்கள் தோற்றம்பெறுகின்றன. அதனால் தேவையற்ற வித்தில் இழப்புக்களும் நட்டங்களுகம் ஏற்படுகவதனால் அவ்வாறு செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றேன். <u>மேலும் ஒவ்வொரு காலாண்டிலும் தீர்க்கப்பட்ட முத்திரைத் தீர்வைகள் தொடர்பான கூற்றில், குறித்த காலாண்டில், குறிப்பாக அனுமதிப் பத்திரங்கள், சம்பளப் பற்றுச் சீட்டுக்கள் மற்றும் ஏனைய பற்றுச் சீட்டுகள் தொடர்பில் அறவிடப்பட்ட மொத்த முத்திரைத் தீர்வையினைக் குறிப்பிடுமாறும், ஒவ்வொரு காலாண்டிலும் அறவிடப்படும் முத்திரைத் தீர்வைத் தொகையினை காலாண்டு முடிவடைந்து 15 (பதினைந்து) ஆந் திகதிக்கு முன்னர் முத்திரைத் தீர்வை வைப்புப் படிவத்தின் பின்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, ஒவ்வொரு வங்கியினதும் காசோலைகளை தனித்தனியான வைப்புப் படிவங்களில் (அதாவது, இலங்கை வங்கியின் காசோலைகளை ஒரு வைப்புப் படிவத்திலும், மக்கள் வங்கியின் காசோலைகளை மற்றொரு வைப்புப் படிவத்திலும்) குறிப்பிட்டு, அவ் வைப்புப் படிவங்களை/ படிவங்களை இலங்கை வங்கயின் ஏதேனும் ஒரு கிளையில் சமர்ப்பித்து, இலங்கை வங்கியிலுள்ள 4153842 என்ற உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தி கணக்கில் வரவு வைக்குமாறும், அவ் வைப்புப் படிவத்தின்/ படிவங்களின் 3 ஆம் பிரதியை / பிரதிகளை தீர்க்கப்பட்ட முத்திரைத் தீர்வைக் கூற்றுடன் இணைத்து முத்திரைத் தீர்வைப் பிரிவின் ஆணையாளருக்கு அனுப்பு வைக்குமாறு வேண்டிக்கொள்கின்றேன். இந் நடைமுறையினைத் தொடர்ந்து பின்பற்றி வருமாறும் இவ்விடயங்கள் தொடர்பில் உங்கள் நிறுவனத்தின் நிதி/கணக்குப் பிரிவின் தலைவர்கள் உள்ளிட்ட உத்தியோகத்தர்களின் விசேட கவனத்திற்குக் கொண்டுவருமாறும் இத்தால் அறியத் தருகின்றேன்.</u>

06. <u>முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாட்டுச் ) சட்டத்தின் 8 ஆம் பிரிவிற்கு இணங்க, 7 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் முத்திரைத் தீர்வை தீர்க்கப்பட்டிராத சந்தர்ப்பத்தில் தவிர, சாதனப் பத்திரத்தில் எழுதிக் கையொப்பமிடும் சந்தர்ப்பத்தில் உரிய பெறுமதியைக் கொண்ட முத்திரையை ஒட்டுவதன் மூலம் முத்திரைத் தீர்வையைச் செலுத்த முடியும். ஒவ்வொரு காலாண்டிலும் அவ்வாறு முத்திரைகளை ஒட்டுவதன் மூலம் செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வைத் தொகையினை குறித்த காலாண்டு முடிவடைந்து 15 (பதினைந்து) ஆந் திகதிக்கு முன்னர் முத்திரைத் தீர்வைப் பிரிவின்</u>

**ஆணையாளருக்கு கடிதம் ஒன்றின் மூலம் அறியத் தருமாறு மிகவும் பணிவாய் வேண்டிக் கொள்கின்றேன்.**

07. மேலும், தேவையான விளக்கங்களைப் பெறுவதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களைத் தொலைபேசியின் ஊடாகத் தொலைபேசியின் ஊடாகத் தொடர்பு கொள்ளுமாறு பணிவாய் வேண்டிக் கொள்கின்றேன்.

ஆணையாளர் - நேரடி தொலைபேசி இல.: 011–2135171 தொலைநகல்: 011-2338577
பொது தொலைபேசி இல.: 011–2135135 நீட்சி: 5171
மின்னஞ்சல் : dc.stampduty@ird.gov.lk

பிரதி ஆணையாளர் - நேரடி தொலைபேசி இல.: 011-2135172
பொது தொலைபேசி இல.: 011–2135135 நீட்சி: 5172
மின்னஞ்சல் : satharasinghe.dhd@ird.gov.lk

உதவி ஆணையாளர்கள் -
நேரடி தொலைபேசி இலக்கங்கள்: 011–2135173, 011–2135174, 011–2135175, 011–2135177, 011–2135178, 011–2135179, 011–2135180
பொது தொலைபேசி இல.: 011–2135135 நீட்சி: 5173, 5174, 5175, 5177, 5178, 5179, 5180

**கல்யாணி தஹநாயக**
**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**

**பிரதிகள்** : **கணக்காய்வாளர் நாயகம் - விசேட கவனம் செலுத்துவதற்காக**